Source: *Tamil Murasu,* Front Page
Date: 4 August 2019

‘ஒருங்கிணைப்பு முயற்சி குடியேறிகளுக்கு தேவை’

குடியேறிகளின் முக்கியத்துவத்தைப் பெரும்பாலான சிங்கப்பூரர்கள் ஒப்புக்கொள்ளும் அதே சமயம் இங்குள்ள சமூகத்துடன் ஒருங்கிணைய போதுமான அளவுக்கு குடியேறிகள் செயல்பட வில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். நேற்று நடைபெற்ற தேசிய ஒருங்கிணைப்பு மன்ற நிகழ்ச்சியில் வெளியிடப்பட்ட ஆய்வு முடிவுகள் இவ்வாறு தெரிவித்துள்ளன. பிற இன விவகாரங்களும் இந்நிகழ்ச்சியில் விவாதிக்கப்பட்டன.

கொள்கை ஆய்வுக் கழகமும் OnePeople.sg என்னும் இன நல்லிணக்க ஆலோசனைக் குழுவும் ஏற்று நடத்திய ஆய்வில் சிங்கப்பூர் குடிமக்களும் நிரந்தரவாசிகளும் கலந்துகொண்டனர். குடியேறிகளின் கலாசாரத்தில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமாக உள்ளதாக பத்தில் ஒன்பது பேர் அல்லது 87 விழுக்காட்டினர் கூறினர்.

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒரே அக்கம்பக்கப் பேட்டையில் ஒன்றாக வசிப்பது சிறந்ததாக உள்ளது என்று 90 விழுக்காட்டினர் தெரிவித்தனர்.

அதேபோல கிட்டத்தட்ட 72 விழுக்காட்டினர் புதிய குடியேறிகளுடன் கூடிப்பேச விருப்பம் தெரிவித்தனர். ஆயினும் சிங்கப்பூருடன் ஒன்றுகலக்க குடியேறிகள் போதுமான அளவுக்கு செயல்பட வில்லை என்று 67 விழுக்காட்டினர் குறிப்பிட்டுள்ளனர்.

பிற நாடுகளிலிருந்து வந்து புதிய சிங்கப்பூரர்களாகத் தகுதி பெறும் பலரும் சொகுசான வாழ்க்கையை உணர்வதாக கொள்கை ஆய்வுக்கழகத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் டாக்டர் மேத்யூஸ் கூறினார். புதிய குடியேறிகள் இங்கு ஒருங்கிணைவதில் உள்ள முக்கிய சவால்களை விளக்கிய அவர், வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தோரின் பழக்கவழக்கங்களை உணர்வது உள்ளிட்டவற்றை மேற்கோள் காட்டினார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கும் இவ்வாண்டு ஜனவரி மாதத்துக்கும் இடையில் 4,015 பேரிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பாகுபாடு, இதர இனத்தவருடனான ஒருங்கிணைப்பு நிலை உள்ளிட்ட பத்து அம்சங்கள் தொடர்பான கேள்விகள் அவர்களிடம் கேட்கப்பட்டன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.